# இரட்சிப்பு

## RATCHIPPU

**RATCHIPPU = SALVATION**

**Volume-12** | **October-2022** | **Issue-05**


**Price Rs.5-00** | **Annual Subscription Rs.60/-**

# திருச்சபைச் சீர்திருத்தம்

நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 1பேதுரு-2:9

## கிறிஸ்துவின் பிரதிநித்துவம் - அனைவருக்குமான ஆசாரியத்துவம்


**Representing Christ is the Priesthood of All Believers**






## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைத்து திருச்சபை விசுவாசிகளுக்கும் எங்கள் அன்பான 'திருச்சபை-சீர்திருத்த தின' நல்வாழ்த்துக்கள். கொரோனா பெருந்தொற்றின் அனைத்து மறு-வடிவங்களும் பெருமளவில் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. எனினும் முகக்கவசம், கை-சுத்திகரிப்பு, சமூக இடைவெளி, தடுப்பூசி ஆகிய பாதுகாப்பு முறைகளை தொடர்ந்து கடைபிடிப்போம்.

தமிழ்நாட்டிலுள்ள அரசியல் குழப்பங்கள் மாற, மதவெறி கலாச்சாரமும், வெடிகுண்டு கலச்சாரமும் முற்றிலும் வேரறுக்கப்பட இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து கருத்துடன் ஜெபித்திட அன்புடன் அழைக்கிறோம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழிய நிகழ்ச்சிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். நமது கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயல்படும் நமது **GOOD TIDINGS - RATCHIPPU HOME** வலைதள ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இம்மாத 'ஜெப-ஜன்னல்' ஜெபங்கள் 14, 21, 28 தேதிகளில் நடைபெறும். 'அனைவரும்-ஊழியத்தில்' என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் அனேகர் இணைந்துள்ளீர்கள், இயேசுவின் திருப்பெயரில் அனைவருக்கும் நன்றி. கைப்பிரதி அருட்பணியில் எங்களுடன் இணைந்திட அனைவரையும் அழைக்கிறோம்.

வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் **ஊழிய இயக்குநரின்** பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 12-ல்). தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்**
**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா**

வேத-வரிகள்-142 1பேதுரு-2:9

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| | |
|---|---|
| **சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**<br>நீங்கள், உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளிக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களையறிவிக் கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராசரிக்க மான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தவான்களாயும், அவருக்குச் சொந்தமான சனமாயுமிருக்கிறீர்கள். | **பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**<br>நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், தேவ னுக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். |
| **திருவிவிலியம் (பொது-1995)**<br>ஆனால், நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினரா னோர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்கள் இனத்தினர்; ஆண்டவ ரின் உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளி னின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**<br>ஆனால், நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள். நீங்கள் அரச ரின் ஆசாரியர். நீங்கள் பரிசுத்த தேசம். நீங்கள் தேவனுக்குச் சொந்தமான மக்கள். தேவன் தாம் செய்த அற்புதமான காரியங் களையும் சொல்வதற்காக உங்களைத் தேர்ந்தெடுத்தார். தமது அற்புதமான ஒளிக்கு இருளிலிருந்து உங்களை வரவழைத்தார். |

வசன தியானம் - 136

# நாம் அனைவரும் குருக்களே



1Peter-2:9

## எவ்வாறு குருக்கள் ஆனோம்?
## எதற்காக குருக்கள் ஆனோம்?
## எத்தகைய குருக்கள் ஆனோம்?



1பேதுரு-2:9

நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று
தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு
தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும்,
பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 1பேதுரு–2:9

இறைமக்களின் மேன்மை இங்கு விளக்கப்படுகிறது. கடவுளின் பிள்ளைகள் அனைவரும் அவரது சமூகத்தில் நிற்கும் குருக்களாகும் தகுதியைப் பெற்றவர்கள் என பேதுரு இங்கு சொல்லுகிறார்.

**இறைமக்களாகிய நாம் அனைவரும் எவ்வாறு குருக்கள் ஆகிறோம்?**

நாம் அந்தகாரத்தினின்று விடுவிக்கப்பட்டு ஆச்சரியமான ஒளிக்குள் தேவனால் கொண்டு வரப்பட்டவர்கள். முன்பு நமது செய்கை, பேச்சு அனைத்தும் இருளின் ராஜ்யத்துக்கே ஏற்றதாக இருந்தது. இப்பொழுதோ, ஒளியின் பிள்ளைகளாக, ஆச்சரியமான தேவப்பிரகாசத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறோம். முன்பு, தேவனில்லாத இருளில் நம்பிக்கை யற்றவர்களாய் வாழ்ந்து வந்த நம்மை பாவம் ஆளுகைச்செய்தது. ஆனால் இப்போழுதோ, கடவுளின் ஒளி நமக்குள் இருக்கிறது (1பேது-2:9மு). ஆகவே, நாம் அனைவரும் திறப்பில் நிற்கும் குருத்துவ உக்கிராண ஊழியர்களாய் இருக்கிறோம். அல்லேலூயா.

**இறைமக்களாகிய நாம் அனைவரும் எதற்காக குருக்கள் ஆகிறோம்?**

தேவன் நம்மை நீதிக்கென்றும், பரிசுத்தத்திற்கென்றும் தெரிந்துகொண்டார். அவருடைய நித்திய ஆசாரியத்தை சுதந்தரித்துள்ள இறைமக்களாகிய நாம் அழைக்கப்பட்டு தெரிந்துகொள்ளப் பட்டதின் நோக்கத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் இவ்வுலக மக்கள் நடுவில் நமது வார்த்தைகளாலும், வாழ்க்கையாலும் கடவுளின் அன்பைப் பிரதிபலிக்கும் கிறிஸ்துவின் பிரதி நிதிகளாக வாழ்வதற்காகவே தெரிந்துகொள்ளபபட்டிருக்கிறோம் (1பேது-29ந) என்பதை உணர் வோம். ஆசாரியத்துவத்துக்கான நமது அழைப்பின் நோக்கத்தை உணர்ந்து கிறிஸ்துவை அறிவிக்கும் பணியைத் தொடர்வோம்.

**இறைமக்களாகிய நாம் எத்தகைய குருக்கள் ஆகிறோம்?**

உன்னத தேவனின் ஆசாரியராய் தெரிந்துக்கொள்ளப்பட்டுள்ள நமக்கு தேவன் கொடுத்திருக்கும் மேன்மை சாதாரணமானதல்ல. நாம் சாதாரண மக்களுக்கு மாத்திரமின்றி ஆட்சியாளர்கள். அதிகாரம் வகிப்போர், உயர் குடி மக்கள் ஆகிய அனைவருக்கும் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாய் செயல் பட ராஜாதிராஜனாகிய கடவுள் கிருபை கொடுத்திருக்கிறார் (1பேது-2:9மு). இந்த நிச்சயத்தோடு கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாய் வாழ் வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

திருச்சபைச் சீர்திருத்த திருநாள் சிறப்பு தேவசெய்தி...



சகோ. ஜாக் செல்லத்துரை

# பற்றுறுதியாளர் அனைவரும் குருத்துவ பணியாளர்களே

## The Priesthood of All Believers

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே, உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. (1 பேதுரு 2:9)

**Bro. Jack Chelladurai**

'Today's Bible Word' Ministries, Chennai, South India

கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறித்துவின் திருப்பெயரால், உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் 21ம் நூற்றாண்டில், கடவுளாகிய இயேசு கிறித்துவைக் குறித்தும், அவரது மேன்மை மிக்க செயல்களைக் குறித்தும் பிற மக்களுக்கு அறிவிப்பதும், அவர்களை கிறித்துவின் அண்டைக்கு வழிநடத்துவதுமான திருப்பணியைச் செய்வதற்கான உரிமையை கிறித்துவ உலகிலும், திருச்சபையிலும் நாம் பெற்றிருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஏனெனில், குருத்துவ பணியை ஒருசிலரே செய்ய முடியும், பாவமன்னிப்பின் நிச்சயத்தை திருச்சபை குருக்கள் மாத்திரமே வழங்கமுடியும். திருமறையை சிலரே படிக்கமுடியும். மீறி செயல்படுவோருக்கு கடும் தண்டனை உண்டு என்ற நிலை திருச்சபை வரலாற்றில் காணப்பட்டது.

திருச்சபையின் இத்தகைய அவல நிலைகளை உடைத்தெரியவே 31.10.1517-ல் திருச்சபையின் சீர்த்திருத்தத் தந்தையான அருளாளர் மார்டின் லுத்தர் அவர்கள் 95-விவாதக் குறிப்புகளை, விட்டன்பர்க் தேவாலயக் கதவில் ஆணியடித்தார். அந்த சீர்த்திருத்த முயற்சியின் தொடக்கமே, திருமறையை அனைவரது கரங்களிலும் தவழ வைத்தது,

மட்டுமல்ல, 'கிறிஸ்து மாத்திரமே' 'கிருபை மாத்திரமே' 'பற்றுறுதி மாத்திரமே' 'திருமறை மாத்திரமே' 'மகிமை கடவுளுக்கு மாத்திரமே' போன்ற தாரக மந்திரங்கள் வலியுறுத்தப்பட்டு, அனைத்து மக்களும் நேரடியாக நிறைவாழ்வுக்குள் வழிநடப்பதற்கான மார்க்கத்தைத் சீர்திருத்தக் கோட்பாடு தெளிவாக்கியது. திருச்சபை குருக்கள் மாத்திரமின்றி, பற்றுறுதி கொண்டிருக்கும் அனைத்து இறைமக்களும் நேரடியாக கடவுளின் திருப்பணியாளர்களாய் மாற முடியும் என்ற மகத்தான உண்மையை உலகிற்கு காட்டியதுள்ளது.

1. உயிருள்ளவர்களாக, உயிருள்ளவரின் வழியாய் குருத்துவப் பணி:

நீரோட்டமுள்ள ஆற்றின் மூலம் அதைச்சுற்றியுள்ள கிராமங்களும், நகரங்களும் செழுமை யாக காணப்படும். அதைப்போலவே உயிரோட்டமுள்ள கிறித்துவ வாழ்வே கடவுளின் திருப்பணியை செய்ய உந்துதலாய் அமையும். ''இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை; மௌன உலகிற்குள் இறங்குவோர் எவருமே அவரைப் புகழ்வதில்லை'' என திருப்பாடல்-115:17ல் நாம் படிக்கிறோம். கடவுளால் அழைக்கப்பட்டாதவர்களும் அவரை அறிவிக்காத எவரும் உயிரோட்டமான நிறைவாழ்வு வாழாதவர்களே.

கிறித்துவ வாழ்வில் நீங்களும் நிறைவாழ்வைப் பெற்றவர்களாக, உயிருள்ளவர் வழியாக குருத்துவம் பெற்றவர்களாய் மாறவேண்டுமென்றால், ''உயிருள்ள கல்லாகிய அவரை அணுகுங்கள்'' (1பேதுரு-2:4). அப்பொழுது, ''நீங்களும் உயிருள்ள கற்களாயிருந்து, ஆவிக் குரிய இல்லமாகக் கட்டி எழுப்பப்படுவீர்கள். இயேசு கிறித்துவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்கள்'' (வ.5). ஒருவேளை நாம் திருச்சபைத் தலைவர்களால் தள்ளப்பட்டவர்களாய் இருந்தாலும், ஆண்டவர் இயேசுவை அணுகும் போது, அவரைப்போல உலகத்தால் தள்ளப்பட்டிருந்தாலும், கடவுளால் குருத்துவப் பணிக்கென்று தெரிந்து கொள்ளப்படுவோம். அதுமட்டு மல்ல, ''அதில் நம்பிக்கை கொண்டோர் பதற்றமடையார்'' (வ.6), ''நம்பிக்கை கொண்ட உங்களுக்கு அது உயர் மதிப்புள்ள தாக விளங்கும்'' (வ.7). அவர்மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை யானது, நம்மை, உயிருள்ளவரின் வழியாக நிறைவாழ்வை பெற்றவர்களாக அனைவருக்கும் நிறைவாழ்வை அருளும் குருத்துவப் பணியினை செய்ய தகுதிப்படுத்தும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட பற்றுறுதியாளர்களாகிய குருத்துவப் பணியாளர்கள் :

ஒடுக்கப்பட்ட, வீழ்த்தப்பட்ட, அடிமைத்தனத்தில் துயருற்று அழுகின்ற, முற்றிலும் இடிக்கப்பட்ட நிலையில் இருக்கும் மக்களைப் பார்த்து: ''நீங்களோ, ஆண்டவரின் குருக்கள் என்று அழைக்கப்படுவீர்களே. நம் கடவுளின் திருப்பணியாளர் என்று பெயர் பெறுவீர்கள்.'' என்று எசாயா இறைவாக்கினர் கூறுகிறார் (எசா-61:6).

அதே காரியத்தை, ஆண்டவராகிய இயேசு கிறித்துவின்மீது பற்றுறுதி கொண்ட அனைவரையும் பார்த்து: ''நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி.'' (1பேது-2:9) என திருத்தூதர் பேதுருவும் கூறுகிறார்.

பற்றுறுதியாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் வழியாக தமது விண்ணரசை கட்டுவதில் கடவுள் எந்த காலத்திலும் மாறாதவராக இருக்கிறார். ஆனால் அதற்கு ஆண்டவராகிய இயேசு கிறித்துவை முழுவதுமாக அணுகுவதும், அவர்மீது பற்றுறுதி கொண்டிருப்பது மட்டுமே சிறந்த தகுதியாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவின் பிரதிநிதிகளாய் தைரியமாக கடவுளின் அருள் நிறைந்த

அரியணையின் முன் நிற்க முடியும். கடவுளுக்கும் நமக்கும் இடையே இருந்த தடுப்புச்சுவர் சிலுவையால் தகர்க்கப்பட்டு நிறைவாழ்வு அருளும் குருத்துவம் அனைவருக்கும் தரப்பட்டுள் ளது. ஏனெனில் அவர் மக்களைப் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது சிலுவை யைக்கொண்டு தகர்த்தெறிந்து, பல கட்டளைகளையும், விதிகளையும் கொண்ட பிரமா ணத்தை அழித்தார். மக்கள் அனைவரையும் தம்மோடு இணைத்து புதிய மனித இனமாகப் படைத்து இவ்வாறு அனைவரையும் ஒன்றாக்கி கடவுளோடு ஒப்புரவாக்கினார் (எபே 2:13-16).

3. தடுக்கிவிழும் குருத்துவப் பணியாளர்கள்:

குருத்துவப் பணியில் ஏற்றத்தாழ்வுகளை கடைப்பிடிப்போர், ஆண்டவர் இயேசு வின் மீது நம்பிக்கையற்றவர்களாக இருந்து, தடுக்கி விழுகிறவர்களாக இருக்கின் றனர். ‘‘நம்பிக்கை இல்லாதவர்களைப் பொறுத்த மட்டில், அது இடறுதற் கல்லாகவும் தடுக்கி விழச்செய்யும் கற்பாறையாகவும் இருக்கும். அவர்கள் திருவசனத்தை ஏற்காததால் தடுக்கி விழுகிறார்கள்; இதற்கென்றே அவர்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்’’ (1பேதுரு-2:7,8) குருத்துவப் பணியில், ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கையுள்ள எல்லா மக்களும் ஈடுபடுதல் கடவுளுக்கு உரிய தாகும். ‘‘எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்’’ என்ற வார்த்தை மத்-28:19-20 வசனங் களில் பயன்படுத்தப்படுகின்றது. எல்லா மக்களினமென்றால், கிறிஸ்துவில் பற்றுறுதி கொண்ட அனைவரும் அவர் மூலமாக கடவுள் முன் கிறஸ்துவின் பிரதிநிதிகளாய் நிற்க முடியும் என்ப தையே குறிக்கிறது. ஏற்றத் தாழ்வுகள் கடைபிடிக்கப்படுமானால், அப்படிப்பட்டவர்கள் ஆண்ட வர் இயேசுவை அறிந்திருந்தாலும், அவரை அறிவித்தாலும், தடுக்கி விழுபவர்களே! அவர் கள் மூலமாக ஆவிக்குரிய இல்லம் கட்டப்படுவது கேள்விக்குரியது. ஏனென்றால் அவர்கள் ஆண்டவர் இயேசுவின் மீதும் அவரது போதனைகள் மீதும் முழுமையாக நம்பிக்கை வைக்கவில்லை. அவர்கள் தங்களுக்குள் இருக்கும் வஞ்சகம், வெளிவேடம், (வச.1) போன்றவற்றை அகற்றாமல் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பும்படி கடவுளின் சந்நிதியில் பரிந்துபேசுவதும் அனைத்து பற்றுறுதியாளர்களின் குருத்துவக் கடமை ஆகும்.

அன்புக்குரிய இறைமக்களே, குருத்துவப்பணி, பற்றுறுதியுள்ள இறை மக்கள் யாவருக்கும் பொதுவானது. கிறிஸ்து இயேசுவின்மேல் பற்றுறுதி கொண்ட எவரும் தங்களுக்காகவும் தங்களைச் சார்ந்த மக்களுக்காகவும் தைரியமாக கிருபாசனத்தை அணுக முடியும். ‘‘ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தின் அருகிலே சேரக்கடவோம்.’’ (எபி-4:16) என்ற தேவ-அழைப்பின் தீவிரத் தன்மையை உணர்ந்திடுவோம். நம் வழியாய் கடவுளின் விண்ணரசு கிறித்துவின் மீது ஊன்றிக் கட்டப்பட கடவுள் அருள் புரிவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
சகோ. ஜாக் செல்லத்துரை

சகோ. ஜாக் செல்லத்துரை,
‘இன்றைய வேத-வசனம்’ ஊழியங்கள், சென்னை, தென்னிந்தியா.

# எமது கைப்பிரதிகள்

## நல்ல விதைகள் – GOOD SEEDS

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

### Good Tidings Bible-Prints Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்குகிறோம். ஒரு வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ. 4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. நற்செய்தி கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 65



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 65

Episode - 65

**முன்னுரை:-** நமது வாழ்வின் ஓட்டத்தில் பலவித அனுபவங்களைக் கடந்து செல்லுகின்றோம். மகிழ்ச்சி, வேதனை, சோதனை, மன உளைச்சல், பாவச்சுமை என்று அடுக்கிக் கொண்டே போக லாம். ஆனாலும், மனுக்குலத்தார் அனைவரும் அவ்வித அனுபவங்களுக்குள் கடந்து செல்லுகை யில் இறைவன் நமக்குப் போதுமானவர் என்பதுதான் உண்மை. தாவீது போன்ற வேத-பக்தர்கள் தங்கள் வாழ்வில் கடவுளை நம்பி மகிழ்ச்சியாக தங்களுடைய ஓட்டத்தை முடித்திருக்கின்றனர். இத்தகையோரது வாய்ப்பிறப்பான சங்கீதங்கள் நம் வாழ்வையும் செழிக்கச் செய்பவையாகும்.

**1. அரவணைக்கும் இறையன்பு:- (வசனம் 1-4)**

தாவீது, தேவனுடைய அளவற்ற அன்பை விவரிப்பதை இங்கு காண்கிறோம். ‘‘தேவனே! நீர் உம்முடைய ஜனங்களைத் தேர்ந்தெடுத்தீர். நாங்கள் உம்முடைய ஆலயத்தில் வந்து தொழுது கொள்ளுமாறு நீர் எங்களைத் தேர்ந்தெடுத்தீர். நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். உமது பரிசுத்த இடமாகிய உமது ஆலயத்தில் எல்லாவித அதிசயமான காரியங்களையும் நாங்கள் பெற்றோம்’’ (வசனம்-4). தொழுவத்திற்கு வெளியே இருந்த நம்மை அவருடைய ஆலயத்தில் தங்கு வதற்காகத் தெரிந்துகொண்ட ஆண்டவருடைய அன்பை எவ்வாறு போற்றுவது! தாவீது அரசர், ‘‘நீர் எங்கள் ஜெபங்களையும், வேண்டல்களையும் கேட்கிறீர். உம்மிடம் வரும் ஒவ்வொருவருடைய விண்ணப்பத்தையும் கேட்கிறீர்’’ (வச-2) என்று ஆண்டவர் நம்மீது வைத்திருக்கிற அன்பையும் பரிவையும் இங்கு விளக்குகிறார். ஆனால், நாம் தேவனிடத்தில் மன்னிப்பைப் பெற்றவர்களாய் அவரது அன்புக்குப் பாத்திரமாய் நடந்துகொள்ள வேண்டும். ‘‘எங்கள் பாவங்கள் மிகுந்த பாரமாய் இருக்கையில் அவற்றை நீர் மன்னித்தருளும்’’ (வச-3) என்று தாவீது கூறுகிறார். தேவன் தமது அரவணைக்கும் அன்பினால் நம்மை மூடுகிறார். நாமும் அவரது சமூகத்தில் நம் குற்றங்கள் குறைகளை அறிக்கையிட்டு அவருக்கு ஏற்புடையவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

**2. ஆண்டுகொள்ளும் இறையன்பு:- (வசனம் 5-8)**

ஆண்டவருடைய அன்பு எல்லைகளைக் கடந்தது. அவரது வல்லமை அளவில்லாதது. ‘‘நீர் செய்யும் அதிசயமான காரியங்களைக் கண்டு, உலகமெங்கும் வாழும் மக்கள் வியப்படைவார்கள். சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியூட்டும்.’’ (வச-8). ‘‘உலகத்தின் பல பாகங்களில் வாழ்வோர் உம்மை நம்புவார்கள்.’’ (வச-5பி). கடவுளின் அன்பானது உலகத்தில் உள்ள அனைவருக்கும் வேறுபாடின்றி நன்மை செய்து அனைத்தையும் அவருடைய ஆளுகைக்குள் ளாக வைக்கும் அன்பு. ‘‘தேவன் தமது வல்லமையினால் மலைகளை உண்டாக்கினார்.

அவருடைய வல்லமையை நம்மைச் சுற்றிலும் நாம் காண்கிறோம். சீறும் கடலை தேவன் அமைதிப்படுத்தினார். ‘சமுத்திரம்’ போல ஜனங்களை தேவன் இந்த பூமியில் உண்டாக்கினார் (வச-6,7) என்று தாவீது தேவனுடைய படைப்பின் மாட்சிமையையும் அவரது ஆண்டு கொள்ளும் அன்பினையும் இங்கு விவரிக்கிறார்.

அன்பானவர்களே! நம்மைப் படைத்த நம் பராபரன் நம்மோடு இருக்கும்பொழுது, நாம் எதைக்குறித்தும் பயப்படத் தேவையில்லை.

**3. ஆசீர்வதிக்கும் இறையன்பு:- (வசனம் 9-13)**

மனுமக்களாகிய நாம் ஆண்டு அனுபவிப்பதற்கான அனைத்து ஆசீர்வாதங் களையும் அருளுகிறவர் இறைவன் என்பதை தாவீது இப்பகுதியில் அழகாக விளக்குகிறார். ‘‘நீர், நிலத்தைப் பாதுகாக்கிறீர். நீரூற்றி, தாவரங்கள் வளர வழிவகை செய்கிறீர். தேவனே, நீர் நீரூற்றுகளில் தண்ணீர் நிரப்பி, பயிர்களை வளரச் செய்கிறீர். உழுத நிலங்களில் மழைத் தண்ணீரை ஊற்றுகிறீர். வயல் களை தண்ணீரால் நனையப்பண்ணுகிறீர். நிலத்தை மழையினால் மிருதுவாக்கு கிறீர். இளம் பயிர்களை வளர்ந்தோங்கச் செய்கிறீர். (வச-9,10).

ஒரு வருடம் மழை பெய்வது தவறிவிட்டால் நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். வானம் பொய்க்கும்பொழுது வறட்சி மற்றும் வேதனை எங்கும் காணப்படுகிறது. அத்தகைய நேரங்களில் நாம் தேவனுடைய கரத்தையே நோக்கிப் பார்க்கிறோம். தேவனுடைய விருப்பமெல்லாம் நாம் சம்பூரண நன்மைகளைப் பெற்று உலகில் மகிழ்ச்சியோடும் சமாதானத்தோடும் வாழவேண்டும் என்பதே. ஆனால் தேவனுக்கு விரோதமாக நாம் பாவம் செய்து அவருடைய பிரமாணங்களை விட்டு விலகிப்போன நேரங்களில் தேவகோபாக்கினையை நம் மீதும் நமது சமுதாயத்தின் மீதும் வரவழைத்துக்கொண்டோம். ஆனாலும் ‘‘எங்கள் பாவங்கள் மிகுந்த பாரமாய் இருக்கையில் அப்பாவங்களை மன்னித்தருளும்’’ (வச-3) என்று தாவீது கூறுவதுபோல தேவனிடம் நமது பாவங்களை அறிக்கையிட்டு மனம் திரும்பும் பொழுது நம்மையும் நம் சமுதாயத் தையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். ‘‘நல்ல அறுவடையால் புதிய ஆண்டை ஆரம்பிக்கிறீர். பயிர்களால் வண்டிகளில் பாரமேற்றுகிறீர். பாலைவனங்களும் மலைகளும் புற்களால் நிரம்பின. புல்வெளிகளில் ஆட்டு மந்தைகள் நிரம்பின. பள்ளத்தாக்குகளில் தானியங்கள் நிரம்பின.’’ (வச-12,13) என விவரிக்கிறார் தாவீது. ஆம், தேவனுடைய அன்பு நம்மை ஆசீர்வதித்து நன்மையினால் நிறைக்கும் அன்பாகும்.

**முடிவுரை:-** அன்பர்களே! நம் தேவனின் அன்பு, அரவணைக்கும் அன்பு. அது ஆண்டுகொள்ளும் அன்பு, அது ஆசீர்வதிக்கும் அன்பு என்பதை கற்றுக்கொண்டோம். இச்சங்கீதத்தின் கடைசி வரிகள், ‘‘ஒவ்வொருவரும் மகிழ்ச்சியில் ஆடிப்பாடிக்கொண்டிருந்தனர்’’ (வச-13) என முடிகின்றன. இதை வாசிக்கும் உங்களது உள்ளங்களிலும் இல்லங்களிலும் இந்த தேவ அன்பின் பெருக்கத்தினால், மகிழ்ச்சியும் ஆடலும் பாடலும் உண்டாக வேண்டும் என்பதே என் உள்ளத்தின் வாஞ்சையாகும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

(இந்த தியானத்துக்கான வேதவசனங்கள் பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன).

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-143 சரியான பதில் அளித்தோர்

1) அமிர்தகனி CHE
2) ஏஞ்சல் சி. TIN
3) ஏஞ்சல் ராஜதுரை CHE
4) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
5) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
6) அரோமா சாத்ராக் TIN
7) ஆர்தர் மாசில்லாமணி CHE
8) அருள்செல்வி VIR
9) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
10) பங்கஜம் வில்சன் CBE
11) பெல்சி தங்கராஜ் CHE
12) பெனிட்டா பிராங்க்ளின் CHE
13) பியூலா அலெக்ஸ் CHE
14) பெட்டி பிரின்ஸ் CHE
15) செலினா பென்சி வில்சன் DR, KUW
16) சந்திராபாய் மாசிலாமணி AVD
17) சந்திரலேகா KAL-AP
18) சந்திரா சாமுவேல் TIN
19) சார்லஸ் ஃபின்னி DR. CHE
20) சார்லட் டேவிட் CHE
21) செல்லம் சங்கீதா TIN
22) சிட்டி NOC
23) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
24) கிறிஸ்துதாஸ் GOP
25) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR
26) கிறிஸ்டி ஞானராஜ் CHE
27) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
28) டேனியல் தாமஸ் TIN
29) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
30) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
31) தெபோராள் ஆனந்தமணி CNG
32) டெல்பி பாத்திமா CHE
33) தேவமணி ஆபிரகாம் TUT
34) தேவநேசம் ராஜாசிங் CHE
35) டோராபாய் CHE
36) எஸ்தர் D.R. TIN
37) எவாஞ்சலின் கிப்சன் MSK
38) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
39) ஞானஜோதி பேரின்பம் VIR
40) ஞானம் ஜெபராஜ் TIN
41) ஞானம் பிலிப் CBE
42) ஞானராணி G. PAN
43) ஞானரதி G. PAN
44) ஞானசெல்வி மோசஸ் CHE
45) கோல்டா ஜேசுபாதம் MUM
46) கிரேஸ் டேனி PCM
47) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
48) கிரேஸ்லின் சாந்தி TIN
49) கிரேஸியா ஜெயபால் CHE
50) கிரிசெல்டா செய்லர் CHE
51) ஹெலன் ஜான்சிராணி TIN
52) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
53) ஹெலன் திலக் TUT
54) ஹேமா அஜீத் CHE
55) ஹேமா கேப்ரியேல் MUM
56) ஹெப்சிபா மங்களராஜ் TIN
57) ஹிம்லா ராஜகுமாரி CHE
58) இளவரசி ஜோபிதா CBE
59) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
60) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
61) ஜமீலா செல்வராஜ் CHE
62) ஜேன்ஸ் ANM
63) ஜேன் தர்மராஜ் TIN
64) ஜான்ஸி சந்தியா MAR
65) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
66) ஜெபா ஜெயராஜ் AVD
67) ஜெபக்குட்டி மோசஸ் TIN
68) ஜெபசீலி கிளின்டன் CHE
69) ஜெபஸ்டின் ஜி. KNR
70) ஜெபா சீனி MKM
71) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
72) ஜெமீலா நிக்ஸன் CHE
73) ஜென்சி ஞானேஷ் MAR/MUM
74) ஜெனித்தா செல்வின் TIN
75) ஜெரின் ஸ்டீபன் CHE
76) ஜெஸி செல்லதுரை CBE
77) ஜெஸி ஜெயக்குமார் TIN
78) ஜெயா ஆல்பர்ட் KUM
79) ஜோனா ஸ்டீபன் AVD
80) ஜோஸ்பின் ஜெஸி CHE
81) ஜாய்ஸ் பாண்டியன் CHE
82) ஜூலியட் CHE
83) ஜூலியட் ஜெயக்குமார் TIN
84) கலா கிருபாகரன் TIN

## வேதாகம போட்டி-143 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

85) கலையரசி செல்வராஜ் CHE
86) கஸ்தூரி எலியாஸ் TIN
87) கிங்ஸ்லி தங்கமணி CHE
88) கிருபா சாந்தி AV. CHE
89) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
90) லதா மைக்கேல்ராஜ் CHE
91) லீலா டேவிட் CHE
92) லீலா ஜெபராஜ் THA-MAH
93) லீலா ஜோஸப் CBE
94) லில்லி ஜாண்ஸன் CHE
95) லிஸி டென்சிங் TIN
96) மல்லிகா V. CHE
97) மல்லிகா ஜாய்ஸ் TCY
98) மணிமேகலை ஜெயக்குமார் TIN
99) மனோகரம் தனராஜ் NAZ
100) மரியாள் JS TUT
101) மேபல் கிறிஸ்டியான் CHE
102) மரிய பாப்பா CHE
103) மெஜிலா ஜோஷ்வா TUT
104) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
105) மெர்சி தனராஜ் CBE
106) மெரிட்டா ஜெயபாலன் TCY
107) மியூரியல் புஷ்பராஜ் CHE
108) நான்சி பால்ராஜ் CTR-AP
109) நிக்ஸன் எவர்பிரைட் TIN
110) ஆலிவ் ஜெயபாலன் CBE
111) பாக்யபாய் ஆரோன் TIN
112) பமீலா எட்வின் KAN
113) பெர்சி பால் பொன்சிங் SAW
114) பிங்க்லின் தேவமலர் CHE
115) பிரேமா பூபாலன் AVD
116) பிரேமா ஜானி PCM
117) பிரேமா ஸ்டாலின் CHE
118) பிரின்ஸ் தயாநிதி CHE
119) பிரிசில்லா தாஸ் CHE
120) ரேச்சல் ஈஸ்டர் VEL
121) ராஜபிரமிளா TPT
122) ராஜ்மேரி சார்லஸ் KER
123) ரமோலா அதிசயராஜ் TIN
124) ராணி பிரபாகரன் TIN
125) ராணி சாமுவேல்ராஜ் CHE
126) ரத்னா டென்னிஸன் CBE
127) ரத்னாவதி பாண்டியன் CHE
128) ரெஜினா விக்டர் TIN
129) ரோஸி ஸ்டீபன் CHE
130) ரூபவதி நோபிள் TIN
131) ரூபி ஜாண்ஸன் TIN
132) ரூத் ஜாண்ஸன் TIN
133) சலோமி மனோகர் DR. CHE
134) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
135) சாமுவேல் டேவிட் TPT
136) சாரா பாலசிங் MDU
137) சரோஜா பாக்யசீலி பர்னபாஸ் MSK
138) சரோஜினி எலிசபெத் CHE
139) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
140) செல்வ பென்சி ஆபேல் KPM-AP
141) செல்வராணி ஆல்பர்ட் CHE
142) செல்வராணி G CHE
143) செல்வி அமிர்தராஜ் CHE
144) ஷாலி எடிசன் CHE
145) சாந்தி ஆல்பர்ட் PCT
146) சாந்தி ஜெபக்கனி KAL-AP
147) சாந்தி ரோஸ் CBE
148) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
149) ஷீபா சாம்ஸன் CHE
150) ஷீலா சாமுவேல் CUD
151) ஷெரீன் ஜெபராஜ் PAN
152) சவுந்தரம் சாலமோன் CHE
153) ஸ்ரீஜா ஃபிராங்க்ளின் CHE
154) ஸ்டெல்லா டேவிட் TUT
155) ஸ்டெல்லா கனகராஜ் CHE
156) சுகிர்தா ஆல்வின் CHE
157) சுகிர்தா சின்னதுரை TIN
158) சுஜாதா சாமுவேல் CHE
159) சுமித்ரா B. CHE
160) சுசீலா தியோடர் TCY
161) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
162) தாரா மாணிக்கம் CHE
163) தெல்மா ஸ்டேன்லி MDU
164) உமா குளோரி CHE
165) வனஜா ஹெர்பர்ட் TIN
166) வசந்தா அன்பன் TIN
167) வசந்தி கருணாகரன் CHE
168) வசந்தி வாசன் CHE
169) விஜயராணி A. CHE
170) விஜி டேனியல் CHE
171) விமலா ஜெயக்குமார் TUT
172) வினோலியா ஜேம்ஸ் KPT
173) வைலட் சைரஸ் CHE
174) வெஸ்லி சாமுவேல் TUT

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் அக்டோபர் – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 14–10–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 21–10–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 28–10–2022 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

# திருச்சபை சீர்திருத்தம்

## கி.பி.1517 - கி.பி.2022 505 ஆண்டுகள்

## Reformation – 505 Rev. Martin Luther, Wittenberg, Germany dated 31st October 1517

திருச்சபை சீர்திருத்தம் என்பது கி.பி.1500களில் ஐரோப்பா கண்டத்தில் பரவிய ஒரு கிறிஸ்தவ சீர்திருத்த இயக்கமாகும். பாவமன்னிப்பு சீட்டு உட்பட்ட கோட்பாட்டில் உள்ள வேறுபாடுகள் காரணமாக ரோமன் கத்தோலிக்க திருச்சபை பிளவுபட இக்கொள்கை வழிவகுத்தது. அக்டோபர் 31, 1517-ல் போதகரும் துறவியுமான மார்ட்டின் லூதர் ஒரு ஆவணத்தை வெளியிட்டார். 95ஆய்வறிக்கைகள் என்று அழைக்கப்பட்ட கிறிஸ்தவம் பற்றிய 95யோசனைகளை ஜெர்மனியின் புகழ்பெற்ற விட்டன்பர்க் நகரின் கோட்டை தேவாலயத் தின் மரக்கதவுகளில் ஆணியடித்தார். கத்தோலிக்க திருச்சபையின் போதனைகளுக்கு எதிரான இந்த யோசனைகளை விவாதிக்க மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்து சீர்திருத்தத்தை துவக்கிவைத்தார். மார்டின் லூதரின் புகழ்பெற்ற 'டயட் ஆ.ஃப் வார்ம்ஸின்' (1521) போதனை-உரையானது, ஐந்து 'சோலா'-க்கள் ('மட்டுமே'-போதனைகள்) மற்றும் 'அனைவருக்கும் ஆசாரியத்துவம்' ஆகிய போதனைகள் அடங்கியதாகும்.

சீர்திருத்தத்தின் 5 'சோலா'க்கள் ('மட்டுமே' போதனைகள்): இவை இரட்சிப்பின் கோட்பாட்டிற்கு அடிப்படை யான 5-கொள்கைகளாகும். அவையாவன: 'பைபிள்-மட்டுமே' (சோலா-ஸ்கிரிப்சுரா), 'விசுவாசம்-மட்டுமே' (சோலா-ஃபைட்), 'கிருபை-மட்டுமே' (சோலா-கிரேஷியா), 'கிறிஸ்து-மட்டுமே' (சோலஸ்-கிறிஸ்டஸ்), 'கடவுளின் மகிமைக்கு மட்டுமே' (சோலி-டியோ-குளோரியா). கிறிஸ்தவரின் வாழ்வில் தனியொரு மனிதனோ, திருச்சபை குருக்களோ அல்லாமல் இந்த ஐந்து விஷயங்கள் மட்டுமே நிறைவாழ்வுக்கு வழிவகுக்கும் என பிரகடனப்படுத்தப்பட்டு அவை லூத்தரன் மற்றும் புராட்டஸ்டன்ட் சபைகளின் கோட்பாடுகள் ஆயின.

# வேதாகம போட்டி-144

வேதபகுதி சங்கீதம் 101-150வரை

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் அக்டோபர்-25

1. கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு அது தமக்கு என்னவாகும்படி விரும்பினார்?
2. கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை எதினால் அலங்கரிப்பார்?
3. எந்த விருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு?
4. யார் தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்? யாருடைய ஆசை அழியும்?
5. வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல் என்னவாயிற்று?
6. யார் எழுந்து நியாயம் செய்ததால் வாதை நிறுத்தப்பட்டது?
7. இரட்சிப்பு யாருக்குத் தூரமாய் இருக்கிறது?
8. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவரது வசனம் யாரை புடமிட்டது?
9. எருசலேம் எப்படிப்பட்ட நகராமாய் கட்டப்பட்டிருக்கிறது?
10. எதைக் கர்த்தர் திருப்பும்போது, சொப்பனம் காண்கிறவர்கள்போல் இருந்தோம்?
11. எதின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்?
12. மகிமையோடே களிகூர்ந்து தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பவர்கள் யார்?
13. பூமி பிளந்து யாரை விழுங்கியது? யாருடைய கூட்டத்தை மூடிப்போட்டது?
14. பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாய் இருக்கிறவர்கள் யார்?
15. கர்த்தர் யாரை தரைமட்டும் தாழ்த்துகிறார்?
16. கர்த்தர் தமது சிங்காசனத்தை எங்கு ஸ்தாபித்திருக்கிறார்?
17. நம்முடைய சகாயம் எவற்றை உண்டாக்கிய கர்த்தரின் நாமத்தில் உள்ளது?
18. காமின் தேசத்திலே பரதேசியாயிருந்தவன் யார்?
19. நிர்மூடர் எவற்றால் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்?
20. ஆகாமியத்தின் கொடுங்கோல் யாருடைய சுதந்தரத்தின்மேல் நிலைக்கிராது?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE SPIRIT OF THE LORD RUACH ADONAAI

## கர்த்தருடைய ஆவியானவர்

EPISODE - 41 ரூவாக் அதோனாய் பாகம் - 41

கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். ஏசாயா–11:2

And the spirit of the Lord shall rest upon Him. Isaiah-11:2

பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் தமது ஜனத்தோடே பேசுகிற கர்த்தருடைய ஆவியானவர் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு அக்டோபர் மாத நல்வாழ்த்துக்கள்.

**ரோமர்-8:16** நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று ஆவியான வர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். கிறிஸ்துவுடனேகூட நாமும் பாடுபடும்போது அவற்றை உன்னத அனுபவங்களாக்குகிறார். இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்ல.

**1சாமு-16:13** சாமுவேல் தைலக்கொம்பை எடுத்து தாவீதை அவன் சகோதரர் நடுவிலே (இன்று நம்மை) அபிஷேகம் பண்ணினார். அந்நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் (இன்று நம் மேல்) வந்து இறங்கியிருந்தார். அந்த ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

**ஏசாயா-63:13,14** இதுவரை வனாந்தர வெளியிலே ஆழங்களில் நடக்கப் பண்ணின கர்த்த ருடைய ஆவியானவர், இப்போது நம்மை இளைப்பாறப்பண்ணுகிறார். இது அவருக்கு மகிமை யுள்ள கீர்த்தியாகும்.

**எசே-37:1-10** கர்த்தருடைய கரம் நம் மேல் அமர்வதால், உலர்ந்த எலும்புகளான நாம் உயிரடைந்து, காலூன்றி மகா பெரிய சேனையாய் நிற்கும்படி செய்கிறார்.

**ஜெபம்:** கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவரே உம்மைத் துதிக்கிறோம் ராஜா! சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க, இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயம் கட்ட, சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலை கூறவும் நீர் எங்களை அபிஷேகம்பண்ணி சிங்காரத்தையும், ஆனந்த தைலத்தையும், துதியின் உடையையும் தந்து நீதியின் விருட்சமாக ஆசீர்வதிப்பதை இயேசுவின் நாமத்தினால் சுதந்தரித்துக்கொள்ளுகிறோம் பிதாவே! ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–137*. . .

# நாளைய தினத்தைக் குறித்து கவலை வேண்டாம்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

கல்கத்தா நகரில் வெல்லிங்டன் என்ற திருமணமாகாத ஒரு தேவமனிதன் அப்பகுதியுள்ள கிராமங்களிலே சுவிசேஷ ஊழியத்தை மிகுந்த வல்லமையாய் செய்துவந்தார். அவரது உண்மை ஊழியத்தால் ஆயிரக்கணக்கானோர் இயேசுவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். ஊழிய நேரம் தவிர மற்ற நேரங்களில் அவர்-தாமே வீட்டுச்சமையல் செய்து சாப்பிட்டு வந்தார். ஒரு ஓய்வு-நாளில் அவர் கிராமங்களிலே ஊழியம் செய்துவிட்டு மிகுந்த களைப்போடும், பசியோடும் தன் வீட்டை அடைந்தார். சிறப்பாக ஊழியங்கள் செய்ய கிருபை அளித்த இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்திவிட்டு, சமையல் அறையைப் பார்வையிட்டபோது, மதிய சமையலுக்கான சாமான்கள் ஒன்றுமே இல்லை. என்றாலும், அவர் மனந்தளராது அடுப்பைப் பற்ற வைத்து பானையிலே வெறும் தண்ணீரை மட்டும் ஊற்றி, விசுவாசத்தோடு முழங்காற்படியிட்டு, தனக்கு சிறந்த மதிய உணவைத் தந்த கர்த்தருக்கு மிக்க நன்றி என்று கூறி, தொடர்ந்து ஜெபித்துக்கொண்டே இருந்தார். அச்சமயத்தில் அவரது நண்பரான லிவிங்ஸ்டன் என்பவரோடு இயேசு கிறிஸ்து பேசி, 'நீ உன் நண்பனாகிய வெல்லிங்டனுக்கு வேண்டிய சமையல் சாமான்களை எடுத்துக் கொண்டு போ' எனக் கூறி னார். லிவிங்ஸ்டன் ஒரு செல்வந்தராய் இருந்தபடியால் ஒரு மாத சமையலுக்கு தேவை யான சாமான்களை வாங்கிக் கொண்டு, அதோடு கோழி-இறைச்சியும் வாங்கிக் கொண்டு வெல்லிங்டன் வீட்டுக்கு சென்றார். வெல்லிங்டன் தனது தேவைக்காக இயேசு இரட்சகரிடம் ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் தான் கொண்டுவந்த சாமான் களை அவரிடம் கொடுத்தார். பின்னர் அவர்கள், சமையல் செய்து, இயேசுவுக்கு நன்றி செலுத்தி ருசி மிகுந்த ஆகாரத்தை உண்டார்கள்.

பின்னர் லிவிங்ஸ்டன், நண்பர் வெல்லிங்டனது வாழ்நாள் முழுமைக்கும் உரிய செலவுகளை தானே ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்து அங்கிருந்து திரும்பிச்சென்றார். வெல்லிங் டனும் இயேசுவுக்கும் தன் நண்பருக்கும் நன்றியுடன் இன்னும் வல்லமையாக ஊழியம் செய்து அநேகரை ஆண்டவரிடம் வழிநடத்தினார்.

பிரியமானவர்களே! நம் வாழ்விலும், நமது தேவைகளான உணவு, உடை, உறைவிடம், பிள்ளைகளின் கல்வி, மருத்துவ, திருமணத் தேவைகள் போன்றவற்றை இயேசு சுவாமி அறிந்திருக்கிறார். சகலத்தையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற கர்த்தர், நாம் அவரை முழு உள்ளத்தோடு பற்றிக்கொள்ளும்போது, நம்மை அதிசயமாக நடத்துவார். ஆகவே, நாளைய தினத்தைக் குறித்து கவலைப்பட வேண்டாம். வேதம் கூறுகிறது:

நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள். நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். மத்–6:34.
சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. சங்கீதம்–34:10.

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed. Editor, 'Ratchippu' Magazine. Mobile No.: 9962924900

EPISODE 3

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-1 பகுதி-3**

### 1. இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்

### 3. போர்ச்சுகீசியர்களின் கட்டுப்பாடு:

போர்ச்சுகீசிய படையின் தலைவராக இருந்த வாஸ்கோ டகாமா, கி.பி.1498-ம் ஆண்டு மே மாதம், லிஸ்பனில் இருந்து தனது பயணத்தைத் தொடங்கி, 170 பேருடன் நான்கு கப்பல்களில் கோழிக்கோடு அருகே உள்ள கப்படுவை வந்தடைந்தது-முதல் இந்தியாவில் காலணித்துவ ஆட்சி தொடங்கியது. கி.பி.1488-ல் டகாமாவின் வருகைக்கு முன், பார்தோலோமியூ டயஸின் கப்பல்கள் நன்நம்பிக்கை முனையை (கேப் ஆ.ஃ.ப் குட் ஹோப்) சுற்றி வந்தன, ஆனால் இந்தியாவை அடைய முடியவில்லை. டகாமாவின் முதல் கடல் பயணம் உலக வரலாற்றின் போக்கை மாற்றியது. போர்த்துகீசியர்கள் இந்தியா, பெர்சியா மற்றும் தென் சீனாவின் கடல்களில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர் மற்றும் காலணித் துவத்திற்கான பாதையை அமைத்தனர்.

வாஸ்கோ-ட-காமா தனது முதல் வருகையில் இந்தியாவில் உள்ள எந்த கிறிஸ்தவ மையத்தையும் பார்க்கவில்லை. டகாமா திரும்பிச் சென்ற பிறகு, கப்ரால் என்பவர் கி.பி.1500-ல் கொடுங்கல்லூரை அடைந்தார். அவர் செயின்ட் தாமஸ் கிறிஸ்தவர்களுடன் நட்பு கொண்டார், அவர்களில் இருவரை ஐரோப்பாவிற்கும் அழைத்துச் சென்றாராம்.

கி.பி.1502-ல் டகாமா இரண்டாவது முறை 10 கப்பல்கள் கொண்ட கப்பற்படையுடன் கொச்சியை அடைந்தபோது, புனித தாமஸ் கிறிஸ்தவர்கள், முஸ்லீம்களின் தாக்குதலில் இருந்து தங்களைக் காப்பாற்ற அவரது உதவியை நாடினர். தங்கள் விசுவாசத்தின் அடையாளமாக, அரசர்களால் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரச் சின்னங்கள், செங்கோல் மற்றும் மேற்கோள்பெயர்கள் ஆகியவற்றை அவர்கள் ஒப்படைத்து, டகாமாவின் ஆட்சியை ஏற்றுக்கொண்டனர்.

போர்ச்சுகீசியர்கள் இந்தியாவை அடைந்தபோது, இந்திய மசாலா (வாசனைப்-பண்டம்) வர்த்தகத்தின் கட்டுப்பாடு நஸ்ரானிகளின் கையில் இருந்தது. அந்நாட்களில் கேரளாவின் 20

நகரங்களில் 30,000 கிறிஸ்தவ குடும்பங்கள் இருந்ததாக பதிவுகள் கூறுகின்றன (அங்கமாலி, வர்கீஸ், போர்ச்சுகீசிய பிரிவு மற்றும் ஆபிரகாம் பிரிவு). போர்ச்சுகீசியர்கள் மதத்தின் பெயரால் மக்களிடையே வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்பினர். மேற்குக் கடற்கரையில் அரேபிய வர்த்தகர்களின் ஏகபோக ஆதிக்கத்தை உடைப்பதே இவர்களின் முதற்பணியாக இருந்தது. கி.பி.1500-ல் கப்ராலின் கீழ் நடந்த முதல் தாக்குதலில் 5 பாதிரிகள் உட்பட 75 போர்த்துகீசியர் கொல்லப்பட்டனர். டகாமா, தமது 2-ம் வருகையின் போது அரேபியர்களை பழிவாங்கி அரபிக்கடலில் இருந்து விரட்டியடித்தார்.

தாமஸ் கிறிஸ்தவ சமூகத்தின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் இறையியல் மற்றும் திருச்சபை ஒற்றுமையை அனுபவித்தனர். போர்த்துகீசியரின் வருகைக்குப் பின் இந்நிலை மாறியது. ஏப்ரல் 1498-ல், இரண்டு தாமஸ் கிறிஸ்தவர்கள் வாஸ்கோடகாமாவின் கப்பற்படையை மெலிண்டா (கிழக்கு ஆப்ரிக்கா) முதல் கோழிக்கோடு (கேரளா) வரை ஓட்டிச் சென்றனர். இது இரண்டு தாமஸ் கிறிஸ்தவ மெட்ரன்களால் (மலையாளி-பிஷப்) பதிவுசெய்யப்பட்டது. 50 ஆண்டுகளுக்குப் வேறு இரண்டு தாமஸ் கிறிஸ்தவர்கள், தூய. பிரான்சிஸ் சேவியருடன் (ஜேசுவைட் மிஷனரி) இணைந்து, மீனவர்களான பரவர் மற்றும் முக்காவர்களை ரோமன் கத்தோலிக்க கட்டுக்குள் கொண்டுவருவதில் உதவினர். ஆயினும், கத்தோலிக்கர்களுடன் இணக்கமான உறவு நீடிக்கவில்லை.

கி.பி. 1561-க்குப் பின்பு, போர்ச்சுகீசிய ஆட்சியில் நடந்த கோவா விசாரணையில் தாமஸ் கிறிஸ்தவர்கள் மதவெறியர்கள் என்று முத்திரை குத்தப்பட்டனர். கி.பி.1599-ல் டயம்பர் ஆயர் ஆட்சி (சினாட் ஆ.்.ப டையம்பூர் - உதயம்பேரூர்) கல்தியாவின் கத்தோ லிக்கரையும், ரோமுக்கு அடிபணியாத இந்திய கிறிஸ்தவர்களையும் வெறுப்பேற்றியது. பண்டைய தேவாலயங்கள் அழிக்கப்பட்டன, நூலகங்கள் எரிக்கப்பட்டன, மேலும் மெசபடோமிய மதகுருமார்கள் தடுத்து நிறுத்தப்பட்டு சிறையிலிடப்பட்டனர், சிலர் தூக்கிலி டப்பட்டனர். ஆயினும், மௌனமான எதிர்ப்பு மற்றும் அடங்கிப்-போகுதல் மூலம் அமைதியாகிவிட்டனர். கி.பி.1653-ல், கத்தோலிக்க எதிர்ப்பாளர்கள் மட்டஞ்சேரியில் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கிரானைட் நினைவுச்சின்னமான ‘வளைந்த சிலுவை’ (கூனன் கிராஸ் - சாய்ந்த சிலுவை) இருந்த இடத்தில் சந்தித்தனர். அங்கு அவர்கள் ஐரோப்பிய பீடாதிபதியை (ஆர்ச் டீக்கன்) இனி ஒருபோதும் ஏற்கமாட்டோம் என சத்தியம் செய்து, சுதேச உயர் மெட்ரானை (தேசபக்தரை) நியமித்தனர். ஆர்ச் டீக்கன் (ராம்பன்) பரம்பில் துமி அவர்களின் முதல் சுதேச மதகுருவானார்.

பின்னர் மார்-தோமா-வில் பிளவு ஏற்பட்டது (‘மார்’ என்பதற்கு சிரியாக்கில் ‘புனிதர்’ என்று பொருள்). தாமஸ் கிறிஸ்தவ குருமாரில் சிலர் ரோமன் கத்தோலிக்கராக இருந்தனர், மற்றவர்கள் கிழக்கு சிரியன் (கிழக்கு அசீரியன் திருச்சபை) மற்றும் மேற்கு சிரியன் (ஜேக்கப் பரடேயஸ் என்ற சுவிசேஷகரை பின்சென்ற ‘ஜேக்கபா’ பிரிவு) கத்தோலிக்கராகவும் இருந்தனர். போர்ச்சுகீசியரின் அதிகாரமும் கட்டுப்பாடும், தாமஸ் கிறிஸ்தவர்களுக்குள் பிளவு ஏற்படுத்தி, ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத அளவில் மேலும் பல கிறிஸ்தவ பிரிவுகளையும், பிறமதங்களின் பெருக்கத்தையும் இந்தியாவில் உருவாக்கி விட்டது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, காட்டுத்-தீ போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்தும், பிரிவினை மற்றும் தீவிரவாதங்களிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம் முடிவுக்கு வர... ஒன்றிய அரசு மாநிலங்களை சமமாய் பாவித்து நடக்க... விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட... மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிதியை ஒன்றிய அரசு பாரபட்சமின்றி வழங்க... இந்திய நீதிமன்றங்கள் மற்றும் நீதியரசர்கள் நீதியை பாரபட்சமின்றி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... தமிழக மக்கள் அனைவரும் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-பிரிவினைவாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட... புயல் -மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகள் நீங்க...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜுடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ் டினா, ஜோ.ஃப்னா, ஜெனிபர், கி.ஃப்ட்லின், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறப்பான ஞானம் வழங்கப்பட...

6) திருமதி. எஸ்தர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. ஈவ்லின் சிப்பொர், திருமதி. எபனேசர், திரு. சாம் எலியேசர், திருமதி. லீலா மனோகர சிங், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தின பாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. சுந்தரிபாய், திருமதி. குளோரி ஜெயபால், திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மங்களராணி ஞானப்பிரகாசம், திருமதி. ஹேமலதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. அலீஸ் ரெஜினாபாய், திரு. அப்பன் டேவிட் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திருமதி. நிறைமதி ஜாணஸன், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) திருமதி. ஏஞ்சல் ஜெனி.ஃபா அவர்களின் சுக-பிரசவத்துக்காக...

# வேதாகம போட்டி-143 (சங்கீதம் 51 - 100)

## சரியான விடைகள்

1. ஆட்டுத் தொழு. இருந்து சங்:-78:70
2. கிரு-சத்தியம், நீதி-சமா சங்:-85:10
3. மகிழச்சி சங்:-97:11
4. ஒரு பிடி தானியம் சங்:-72:16
5. கர். ஆலயத்தில் சங்:-92:13
6. கீழ்மக்கள், மேன்மக்க சங்:-62:9
7. தேவனுடைய சங்:-68:17
8. புல் சங்:-90:5-6
9. யூதாவின் சங்:-69:35
10. பூமியின் சங்:-59:13
11. பர்வதங்கள் சங்:-97:5
12. ஆஸ்தியை சங்:-73:12
13. மதிகேடன் சங்:-53:1
14. பர்வதங்கள், மேடுகள் சங்:-72:3
15. கன்மலையை சங்:-78:20
16. இர.பிரியர், சூது-மனுஷர் சங்:-55:23
17. மனுஷனுடைய சங்:-94:11
18. சீயோ.வாசல்களில் சங்:-87:2
19. துன்மார்க்கர் சங்:-58:3
20. நல்லவராக சங்:-73:1

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## திருச்சபை சீர்திருத்த தின நல்வாழ்த்துக்கள்

இரட்சிப்பு பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவா ளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், நல்ல-விதைகள் கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார் ஆகிய உங்கள் அனைவ ருக்கும் எங்களது உள்ளம் கனிந்த **திருச்சபை சீர்திருத்த தின நல்வாழ்த்துக்கள்.**

கர்த்தர்தாமே உங்களை
ஆசீர்வதிப்பாராக.
ஆமென்.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

**REFORMATION-505**

31st October 2022

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 9th September 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் ஆட்சிக்கு வந்து ஒரு ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் நேட்டோ அல்லாத முக்கிய நட்பு நாடுகள் பட்டியலில் இருந்து ஆப்கானிஸ்தானை நீக்குவதாக அமெரிக்கா அறிவிப்பு.

2. விமானங்களுக்கான ‘ஏவி-கேஸ்’-க்கு (ஆட்டொமோடடிவ் கேசோலின்) மாற்றாக, ‘ஏவிஜிஏஎஸ்-100எல்எல்’ என்னும், புதிய உள்நாட்டு-உற்பத்தி எரிபொருளை, ஒன்றிய பெட்ரோலியத் துறை அறிமுகம் செய்தது.

3. தமிழகத்தில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிவரும் மகப்பேறு துணை-செவிலியர்களுக்கு காலமுறை ஊதியமும், கிராம சுகாதார செவிலியர்களுக்கு பதவி உயர்வும் வழங்க வேண்டும் என தமிழக அரசு செவிலியர் சங்கம் கோரிக்கை.

4. ‘ஆல்-நியூ-11ஜி’ மாடல் 6” கிண்டிலை அறிமுகம் செய்துள்ளது ‘அமேசான்.’ இது 300பிபிஐ ரிசலுஷன், 16ஜிபி-மெமரி, வை-பை, 128கி எடை, 8மிமி தடிமன், கண்-கூசா ஒளித்திரை, 42-நாட்கள் நீடிக்கும் பேட்டரி ஆகியவற்றை கொண்டதாகும்.

5. தென்-ஆப்பிரிக்காவில் பிப்-2023ல் நடைபெறும் பெண்கள் டி-20 உலகக்கோப்பை போட்டிக்கு அயர்லாந்து மற்றும் வங்கதேச அணிகள் தகுதிச்சுற்றில் தகுதி பெற்றுள்ளன. இந்தியா உட்பட 8அணிகள் நேரடித் தகுதி பெற்றன. மொத்தம் 10அணிகள் இதில் பங்கேற்கின்றன.

**Posted on: 9th September 2022**

**To**

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.